# கொள்ளைக்காரர்கள் எப்படி இருப்பார்கள் 8

“அப்பா!
கொள்ளைக்காரர்கள்
எப்படி இருப்பார்கள்?
அறியத்துடிக்கும்
என் மகளின் கேள்விகளில்
நான்
அறிந்து வைத்தவை
சரிந்து போகின்றன”.

“ஏன்? படங்களை நீ பார்த்ததில்லையா”

“படங்களில் நான் பார்த்த
கொள்ளைக் காரர்கள்
மீசை வைத்து... முகமூடி மாட்டி
துப்பாக்கியால் சுட்டு... காரில் பறந்து...
நிஜத்திலும் கொள்ளைக் காரர்கள்
அப்படியா இருப்பார்கள்?



“அப்படியும் இருக்கலாம்
ஆயினும் மகளே!
அப்படி ஒரு கொள்ளைக்காரனை
இதுவரை நான் பார்த்ததில்லை”

“அப்படியென்றால்
இதுவரை நீங்கள்
எதையும் களவு கொடுத்ததில்லையா?

நினைவு தெரிந்த நாளிலிருந்து...
களவு போனவை
எவையென்று கணக்கிட்டால்...."
சமூகத் தராதரத்தால்
சாய்க்கப்பட்ட
பெருமைக்குரிய எனது கணங்கள்....

இளமைக் கிளைகளில்
எனக்காகக் கூவி
வேட்டையாடப்பட்ட
வசந்தகாலக் குயில்.....

பெற்ற வயிற்றுக்கும்
ஒரு துளியும் வார்க்காம
களவு போகும்
எனது வேர்வைகள்



எனது வெறுமையில்
கரைந்து போகும்
உன் அன்னையின்
புன் முறுவல்கள்....

எட்டாமல் போன
வாய்ப்புகளுக்காக
என்னைக் குறை சொல்லாத
உன்
சகோதர எதிர்பார்ப்புகள்....
களவு கொடுத்த கணக்கில் வந்தவை
பொருள்கள் மட்டுமல்ல -
நானும் என் வாழ்க்கையும்.

என்னோடு சேர்ந்த
எல்லா முகத்திலும்
களவாடப்பட்ட வாழ்க்கையே
எழுதப்பட்டுள்ளது.

“கொள்ளைக் காரர்கள்
எப்படி இருப்பார்கள்?”
யாரைக் காட்டி அடையாளம் சொல்லுவேன்?

“பசையுள்ள புத்தகத்தை
ரகசியமாய் கொறித்துப்
பார்வைக்குத் தப்பும்
சுண்டெலி போலவா?
பிஞ்சுக் கரங்களில்
வடையைப் பறித்துப்
பறந்து போன
காகம் போலவா?



சிறகு வளராத
கோழிக் குஞ்சைக்
கொத்திச் சென்ற
பருந்து போலவா?”

எதனைக் காட்டி நான்
அடையாளம் சொல்லுவேன்?
எங்கள் வாழ்க்கையை
எல்லா வகையிலும்
கொள்ளையடிப்பவர்களுக்கு
முகமூடி இல்லை.



அனுபவத்தால் அவர்களை நீ
அடையாளம் காண்கையில்
எங்களைப் போல
நீ
ஏமாந்து விடாதே.

இன்குலாப்

## அரும்பதங்கள்

கணங்கள் - ஒன்றைச் செய்வதற்கு உரிய தருணம்

வார்க்காமல் - ஊற்றாமல்

புன்முறுவல்கள் - புன்னகை (ஒலியெழுப்பாமல் உதடு விரிய மெல்ல சிரித்தல்)

கரைதல் - நீங்கிச் செல்லுதல்

கொறித்தல் - பல்லால் அல்லது அலகால் பிரித்து அல்லது உரித்துத் தின்னுதல்.

## கிரகித்தற் பயிற்சி

*01. இக்கவிதையை எழுதியவர் யார்?*

*02. மகள் தந்தையிடம் கேட்ட முதல் வினா எது?*

*03. படங்களில் வரும் கொள்ளைக்காரர்கள் எப்படி இருப்பார்கள் என கவிதையில் கூறப்பட்டுள்ளது?*

*04. எல்லோர் முகத்திலும் என்ன எழுதப்பட்டிருப்பதாக கவிஞர் கூறுகிறார்?*

*05. கொள்ளைக்காரர்களை எதனூடாக அடையாளம் காணமுடியும் என்று கவிதையில் கூறப்பட்டுள்ளது?*

*06. இக்கவிதையில் உம்மைக் கவர்ந்த வரிகளையும் அதற்கான காரணத்தையும் எழுதுக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : நடைமுறை வாழ்வில் நீங்கள் அறிந்த கொள்ளைக் காரர்களுக்கும் கவிதையில் விளக்கப்பட்டுள்ள கொள்ளைக்-காரர்களுக்கும் உள்ள பொருத்தப்பாட்டைக் கலந்துரையாடுக.

செயற்பாடு 2.: கவிதையைக் கிரகித்து பொருள் உணர்ந்தமை புலப்பட முழுக் கவனத்தையும் செலுத்தி வாசிக்குக.

செயற்பாடு 3 : உமது வாழ்வில் பெற்ற முக்கிய அனுபவங்களைக் கவிதையாக எழுதுக.

செயற்பாடு 4 : குழுவாகச் செயற்பட்டு இன, மத ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் சுவரொட்டி ஒன்றைத் தயாரித்துக் காட்சிப்படுத்துக.

# மொழிவளம்

## ▶இணைமொழிகள்

**பின்வரும் வசனங்களைப் பொருள் விளங்குமாறு வாசிப்போம்.**

★ மாணவர்கள் ஆடிப் பாடி மகிழ்ந்தனர்.
★ தாத்தா பாயும் படுக்கையுமாக இருக்கின்றார்.
★ வறட்சியின் காரணமாக புல் பூண்டு கூட முளைக்கவில்லை.

இந்த வசனங்களில் இடம்பெறும் ஆடிப் பாடி, பாயும் படுக்கையும், புல்பூண்டு ஆகிய சொற்களை இணைமொழிகள் என்று கூறுவர்.

இணைமொழிகள் பொருட் செறிவும் ஓசைநயமும் கொண்டவை.
வாக்கியங்களில் இணைமொழிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தப் பழகிக் கொள்வோம்.

அல்லும் பகலும்
ஆடிப்பாடி
இங்குமங்கும்
இடைக்கிடை
உள்ளும் புறமும்
ஏச்சுப் பேச்சு
ஒய்வு ஒழிவு
கொஞ்ச நஞ்சம்
வற்றி வரண்டு
வாழ்வு தாழ்வு

## பயிற்சி

**பின்வரும் இணைமொழிகளைப் பயன்படுத்தி வாக்கியங்கள் அமைப்போம்.**

1. அருமை பெருமை  2. ஊண் உறக்கம்  3. வாழ்வு தாழ்வு
4. இடைக்கிடை  5. வற்றி வரண்டு

# இலக்கணம்

## ▶ ‘ர’கர ‘ற’கர வேறுபாடுகள்

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

★ பச்சை மிளகாய் உறைப்பாக இருக்கும்.
★ அதிபரின் உரை இடம்பெற்றது.

முதலாவது வசனத்தில் இடம்பெறும் உறைப்பு என்ற சொல்லில் இடம்பெறும் உறை என்ற அடிச்சொல் காரம் என்ற பொருளைத் தருகிறது.

இரண்டாவது வசனத்தில் இடம்பெறும் உரை என்ற சொல் பேச்சு என்ற பொருளைத் தருகிறது.

ர , ற எழுத்துக்கள் பொருள் வேறுபாட்டை ஏற்படுத்தக் கூடியன. இந்த வேறுபாட்டைத் தரும் ர , ற எழுத்துக்களைப் பற்றி அறிவுபெறும்போது தெளிவாக எம்மால் தொடர்பாடல் செய்யக் கூடியதாக இருக்கும்.

| | | |
|---|---|---|
| கீரி | - | ஒரு பிராணி |
| கீறி | - | பிளந்து |
| அருந்து | - | உண், குடி |
| அறுந்து | - | துண்டு பட்டு |
| குரங்கு | - | மிருகம் |
| குறங்கு | - | தொடை. |
| துரை | - | பிரபு |
| துறை | - | கப்பல் தங்கும் இடம் |
| பொறி | - | இயந்திரம் |
| பொரி | - | பொரித்தல் |
| பிரதேசம் | - | இடம் |
| பிறதேசம் | - | வேற்று நாடு |
| பாரை | - | மீன் |
| பாறை | - | கற்பாறை |

## பயிற்சி

**01. பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.**

1. பூஞ்சோலையில் பூக்கள்..................... (சொறிந்தன சொரிந்தன)
2. உலகில் ............... (மறம், மரம்) அதிகமாக வெட்டப்படுகிறது.
3. உலகம்.........................(மாறி, மாரி) வருகிறது.
4. என் மனக்.......................... (குரையை, குறையை) யாரிடம் கூறுவேன்.
5. எம் முன்னேற்றத்திற்கு ஐங் .......................... (குறவரின், குரவரின்) ஆசி அவசியம்.

**02. பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாக்கியமாக எழுதுக.**

1. ஏரி , ஏறி
2. அலரி , அலறி
3. உரை , உறை
4. புரம் , புறம்
5. வருத்தல் , வறுத்தல்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக